Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 11, 2024

புதன்கிழமை செப்டெம்பர் 11, 2024 | ஒளி: 10 கதிர்: 048 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பால் மாவின் விலைகள் குறைப்பு



உள்ளூர் பால் மாவின் விலைகளை குறைக்க உள்ளூர் பால் மா உற்பத்தி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

தொடர்ச்சி P2

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான அடிப்படை சம்பளம்

# ரூ.1,350



## "வழக்குகள் வாபஸ்"



பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் வாபஸ் பெறப்படும் என்று தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற வேதன நிர்ணயசபை பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்தார் .

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

தொழில் அமைச்சில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் சம்பள நிர்ணய சபை இன்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) கூடியது.

தொடர்ச்சி P2

## "மீதியை பெற்று தருவோம்"

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை (10) முதல் கட்டமாக 1,350 ரூபாய் அடிப்படை சம்பளம் வங்கப்பட்டுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும்,கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அதை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக இன்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாய்

தொடர்ச்சி P2

## "மக்கள் மகிழ்ச்சி"



அடிப்படை நாளாந்த சம்பளம் 1,350 ரூபாவினை பெற்றுக்கொடுத்த இ.தொ.காவிற்கு பெருந்தோட்ட மக்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர் என அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஊடகப்பிரிவு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்படி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை நாளாந்த சம்பளம் 1,350 ரூபாவும், உற்பத்திற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்குவதாக தீர்மானம் எட்டப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## தமிழ் வேட்பாளருக்கு ஆதரவளிக்க கோரிக்கை

புகஜிந்தன்

நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் அதிக அளவிலான வாக்குகளை தமிழ் வேட்பாளர் பெறுவதற்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2

## தரம் 5 வகுப்புகளுக்குத் தடை




2024ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு பயிற்சி வகுப்புகள் அல்லது மேலதிக, பிரத்தியேக வகுப்புகளை நடத்துவது புதன்கிழமை (11) நள்ளிரவு முதல் தடை செய்யப்படுவதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் எச். ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 2,849 பரீட்சை மையங்களில் தரம் ஐந்து பரீட்சை செப்டெம்பர் 15 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் என்று அவர் கூறினார். பரீட்சை முடியும் வரை இந்த தடை நீடிக்கும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





## விபத்தில் இளைஞனின் பாதம் துண்டிப்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பகுதியில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞனின் பாதம் துண்டிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 'மஹபொல' அதிகரிப்பு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் 'மஹபொல' மற்றும் மாணவர் உதவுதொகை தவணைக் கட்டணங்கள் 2015 தொடக்கம் இதுவரை அதிகரிக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

## "செய்திகள் பொய்யானவை"

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை


2025ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை என வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப்புறம்பானவை என்பதோடு, அதற்கான அனுமதி ஏற்கெனவே கிடைத்துள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### ஓட்டோவில் இருந்து சிசுவின் சடலம் மீட்பு:

## திருமணமாகாத பெண்ணும், பக்கத்து வீட்டு தந்தையும் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ



அக்கரப்பத்தனை ஹென்போல்ட் ஜி.எல்பிரிவில் உள்ள தோட்டத் தொழிலாளர் வீடொன்றுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின்புறம் பொலித்தீன் பையில் சுற்றப்பட்டு கிடந்த பெண் சிசுவின் சடலம் தொடர்பில், சிறுமியின் தாயும் முச்சக்கரவண்டியின் சாரதியும் அக்கரபத்தனை பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு

## ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான அடிப்படை சம்பளம் ரூ.1,350

## "வழக்குகள் வாபஸ்"

பல வாத விவாதங்கள் பல வர்த்தமானிகள் பல வழக்குகள் என நீண்டு கொண்டு சென்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பிலான இழுபறி நிலைமைக்கு முற்றுப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

அரசாங்கமும் தொழில் அமைச்சும் சம்பள நிர்ணய சபையும் ஒன்றிணைந்து அடிப்படை சம்பளத்தை உறுதி செய்ய வேண்டிய தார்மீக பொறுப்பு உள்ளது .

அடிப்படை சம்பளம் 1,350 ரூபாய் ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதி சேவைக்கால கொடுப்பனவு என்பன 1,350 ரூபாய் அடிப்படை சம்பளத்திற்கே வழங்கப்படும். epf /etf 15 சதவீதம் தொழில் தருநர்களினால் வழங்கப்படும் அதனையும் ஒன்று சேர்த்தால் ஒரு நாள் தொழிலுக்குச் செல்லும் பெருந்தோட்ட தொழிலாளர் ஒருவருக்கு 1,552 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் .இன்றிலிருந்து இதனை நடைமுறைப்படுத்த விசேட வர்த்தமானி வெளியிடப்படும் என்றார்.

இதற்கு மேலதிகமாக வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புத் தொகை அந்தந்த பிரதேசங்களுக்கும் , துறைகளுக்கும் ஏற்ற வகையில் தொழிற்சங்கமும் மற்றும் நிர்வாகங்களும் கலந்துரையாடி முறையான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். இதற்கு கட்டுப்பாட்டு எல்லை கிடையாது

இருப்பினும், மேலதிக நிறைக்கான கொடுப்பனவு 1 கிலோவிற்கு 50 ரூபாய்க்கும் மேலதிகமாக வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் எட்டப்பட்டுள்ளது. அத்துடன், தொடரப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## "மீதியை பெற்று தருவோம்"

வழங்கப்பட்டுள்ள நிலையில், மீதி 350 ரூபாயும் பேச்சுவார்த்தைகளின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை பெற்றுக்கெடுக்க ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கும் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

இன்று முதல் 1,350 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்க பெருந்தோட்ட கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது என செந்தில் தொண்டமானின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மக்கள் மகிழ்ச்சி"

அந்தவகையில், வெளியிடப்பட்ட வர்த்தமானியை உறுதிப்படுத்தி, செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற கலந்துரையாடலின்படி, நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும், மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோ கிராம் தேயிலை கொழுந்துக்கு 50 ரூபாவும் வழங்குவதாக பெருந்தோட்ட கம்பனிகள் உறுதியளித்துள்ளது. மேலும் உற்பத்தித் திறனுக்கான 350 ரூபாய் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றன.

மேலும், இந்த 1,350 ரூபாய் நாட்சம்பளத்தை பெற்றுக்கொடுத்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட அனைவருக்கும் மக்கள் தமது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

1,350 ரூபாய் பெற்றுக்கொடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் மேலதிகமான 350 ரூபாவினை பெற்றுக்கொடுப்பது பெரிய விடயமல்ல. எனவே, விரைவில் அதனையும் இ.தொ.கா. பெற்றுக் கொடுக்கும் என நம்பிக்கையுடன் மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

## விபத்தில் இளைஞனின் பாதம் துண்டிப்பு

விபத்தில் காயமடைந்த இளைஞனை , அவ்விடத்தில் இருந்தவர்கள் மீட்டு, அம்பியூலன்ஸ் வண்டி ஊடாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், துண்டாடப்பட்ட பாதத்தையும் மீட்டு நோயாளர் அம்பியூலன்ஸ் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தமிழ் வேட்பாளருக்கு ஆதரவளிக்க கோரிக்கை

அந்தவகையில், சாவகச்சேரி நகர் பகுதியில் தமிழ் பொது வேட்பாளர் அரியனேந்திரனுக்கு ஆதரவு கோரி தேர்தல் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வீதியால் சென்ற பொதுமக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் கடமை புரிவோருக்கு தேர்தல் பிரசார துண்டு பிரசுரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## 'மஹபொல' அதிகரிப்பு

குறித்த தவணைக் கட்டணத்தை திருத்தம் செய்வதற்கான தேவையை கல்வி அமைச்சர் மற்றும் வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை கவனத்தில் எடுத்திருந்தது.

குறித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, மஹபொல புலமைப்பரிசில் தவணைக் கட்டணத்தை 7,500 ரூபாய் வரைக்கும், மாணவர் உதவு தொகை தவணைக் கட்டணத்தை 6,500 ரூபாய் வரைக்கும் 2025 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## "செய்திகள் பொய்யானவை"

2024 மே மாதம் 27 திகதியிட்ட எண் 24/பல்வகை (020) என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைக்குழுக்களுக்கு இடையே உள்ள சம்பள முரண்பாடுகளை ஆய்வு செய்து, 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளில் உள்ளடக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில், அரச சேவையின் அனைத்துப் பிரிவுகளினதும் சம்பளம்,ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்க ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது.அந்த நிபுணர் குழுவானது அரச துறையின் 81 பிரதான தொழிற் சங்கங்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி, உரிய தகவல்களை ஆய்வு செய்து இடைக்கால அறிக்கையைத் தயாரித்துள்ளது.

இது தொடர்பாக குழுவின் தலைவர் உதய ஆர்.செனவிரத்ன தெளிவுபடுத்தும்போது, இந்த அறிக்கை தயாரிப்பில் மேலும்பல தொழிற்சங்கங்கள், பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சுமார் 391தனிநபர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளும் ஆய்வு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன என்று தெரிவித்தார்.

தற்போதுள்ள அரச நிதி வாய்ப்புகள் மற்றும் அரச துறை ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் கருத்தில் கொண்டு, அரச செலவை முகாமைத்துவம் செய்வதற்கான முன்மொழிவுகளுடன்,

ஏற்கெனவே உள்ள ஊதிய கட்டமைப்புகளைத் திருத்துவதற்கான அளவுகோல்கள் மற்றும் தரநிலைகள் அத்துடன் அரச செலவுகளைக் குறைத்தல் மற்றும் வருமானம் ஈட்டும் மூலோபாயங்களை உள்ளடக்கிய கொள்கை ரீதியிலான கட்டமைப்பை இந்த இடைக்கால அறிக்கை, பரிந்துரைக்கிறது

அதன்படி, "அமைச்சரவைப் பத்திரம் எண்24/1609/601/097, ஆன அரச சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகளைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை" நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் 08-12-2024ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கையை , அமைச்சரவை பரிசீலித்துக் கலந்துரையாடிய பின்னர், அந்த இடைக்கால அறிக்கையின் பந்தி 03இல் குறிப்பிடப்பட்டுள்ள (3.1) முதல் (3.18) வரையிலான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கொள்கை ரீதியிலான அங்கீகாரம் அளித்தல் மற்றும் மேற்படி இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை 2025ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உட்படுத்தி நடைமுறைப்படுத்தும் வகையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

■ 2025ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்று வருடங்களுக்குஒருமுறை திருத்தத்திற்கு உட்படும் வகையில்) ரூ.25,000/- மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை வழங்கல்,

■ அரச சேவையில் குறைந்தபட்ச ஆரம்ப மாதாந்தச் சம்பளம் 24%முதல் 50%-60%வரையில் அதிகரிப்பதோடு, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்த சம்பளம் ரூ. 55,000 ஆக மாற்றி அதற்கேற்ப ஏனைய அனைத்து பதவிகளுக்குமான அடிப்படை சம்பளத்தை மாற்றியமைத்தல், வர்த்தக அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தவிர அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இந்த புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு முறையை நடைமுறைப்படுத்துதல்,

■ 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளுக்கு அவர்களுக்கு உரிய சம்பள அதிகரிப்புகளை வழங்கி அவர்களின் ஓய்வூதியங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான முரண்பாடுகளைத் தீர்த்தல்,

■ ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, கடமையில் உள்ள அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் 50%க்கு சம்மாகும் வகையில் ஜனவரி 2025 முதல் வழங்குதல்,

■ தற்போதுள்ள வரிக் கொள்கைகளுக்குள் இந்தச் செலவுகளை நிர்வகிப்பதற்கு உட்பட்டு, இந்த சம்பள முறை மற்றும் முன்மொழியப்பட்ட சம்பள முறை 2025 ஜனவரி 01 முதல் நிதி வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு படிநிலையாக செயல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

■ இதன்படி, மேற்படி நிபுணர் குழு தமது இறுதி அறிக்கையை 23.09.2024 அன்று ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதுடன், குறித்த அறிக்கையின் 01 முதல் 08 வரையான பரிந்துரைகளால் முன்வைக்கப்பட்டுள்ள அரச சேவைகளின் வகைப்பாடு, அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள், ஓய்வூதிய வேறுபாடுகளை நீக்குதல்,விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் மற்றும் அக்ரஹார செலுத்தல்கள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் திருத்தங்கள் 01.01.2025 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான அங்கீகாரத்தை வழங்குதல், அந்த பரிந்துரைகள் 2025 வரவு-செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறான உணர்வுபூர்வமான விடயங்களை வெளியிடும் போது மக்களை தவறாக வழிநடத்தும் பொய்யான செய்திகளை வெளியிடாமல் உண்மைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை மக்கள்மயப்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பால் மாவின் விலைகள் குறைப்பு

செவ்வாய்க்கிழமை (10) இரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலைகள் குறைக்கப்படும்.

400 கிராம் முழு கிரீம் பால் பவுடரின் விலையை ரூ. 75 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் பக்கெட் விலையை ரூ. 190 என்றடிப்படையில் குறைக்கவுள்ளது.

அதன்படி, சந்தையில் 400 கிராம் பால் பாக்கெட் ரூ.1,050 விலையிலும், ஒரு கிலோ கிராம் பாக்கெட் ரூ. 2,585 லும் விற்பனைச் செய்யப்படும்.

## திருமணமாகாத பெண்ணும்,...

கைது செய்யப்பட்ட சிசுவின் தாயார் 24 வயதான திருமணமாகாத பெண் எனவும், இவர் முச்சக்கரவண்டி சாரதியுடன் (28) தொடர்பு வைத்திருந்தவர் எனவும், முச்சக்கரவண்டி சாரதி திருமணமானவர் என்றும் அவர், ஒரு பிள்ளையின் தந்தையாவார் என்பதும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

சிசுவை பிரசவித்த சந்தேகநபரான அந்த பெண், சந்தேகநபரான முச்சக்கரவண்டி சாரதியின் வீட்டுக்குப் பக்கத்தில் வசிப்பதாகவும், அவர் மாவனெல்ல பிரதேசத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், சந்தேகநபரான முச்சக்கரவண்டியின் சாரதி, தனது சகோதரனுடைய முச்சக்கரவண்டியில் மாவனல்லை பிரதேசத்திற்குச் சென்று அவரை அக்கரப்பத்தனை தோட்டத்துக்கு அழைத்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிசு கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டு சில நாட்களாகி இருந்ததாகவும், குழந்தையின் கழுத்தில் கம்பி ஒன்று இருந்ததாகவும், எனவே, இது படுகொலையா என்பது பிரேதப் பரிசோதனையின் பின்னரே தெரியவரும் எனவும் அக்கரபத்தனை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியில் இருந்து கடும் துர்நாற்றம் வீசியதால் சந்தேகமடைந்த முச்சக்கரவண்டி சாரதியின் தாய் முச்சக்கரவண்டியின் பின்பகுதியில் பொலித்தீன் பையில் சடலமாகக் கிடந்ததைக் கண்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் கண்டெடுக்கப்பட்ட சிசுவின் சடலம் தொடர்பில் நுவரெலியா பதில் நீதவான் விஜேவிக்கிரமவினால் நீதவான் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சிசுவின் சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்தியரிடம் ஒப்படைக்குமாறு அக்கரபத்தனை பொலிஸாருக்கு பணித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஐரோப்பிய ஒன்றியம் திங்கட்கிழமை(09) தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. குறித்த அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள உண்மைகளை ஏற்றுக்கொள்வதாகவும், இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மேலும், இது தொடர்பான அறிக்கை தொடர்பில் பிரித்தானியாவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மெசிடோனியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைமையிலான குழுவும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## தரம் 5 வகுப்புகளுக்குத் தடை

இதன்படி, பாடம் சார்ந்த விரிவுரையாளர்கள், கருத்தரங்குகள் அல்லது வகுப்புகளை ஏற்பாடு செய்தல், பரீட்சை சார்ந்த தாள்களை அச்சிடுதல், விநியோகித்தல் மற்றும் பரீட்சைக்கு முன்னர் இதுபோன்ற கேள்விகளை வழங்குவதாகக் கூறி இலத்திரனியல் ஊடகங்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் மூலம் விளம்பரம் செய்தல் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

"ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம் விதிமுறைகளை மீறுவது கண்டறியப்பட்டால், அருகிலுள்ள காவல் நிலையத்திலோ அல்லது தேர்வுத் துறையிலோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களை டயல் செய்வதன் மூலம் புகார் அளிக்கலாம்" என்று அவர் கூறினார்.

முதல் வினாத்தாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தொடங்கி 10.45 மணிக்கு முடிவடையும், இரண்டாம் வினாத்தாள் அதே நாளில் 11.15 மணிக்கு தொடங்கி மதியம் 12.15 மணிக்கு முடிவடையும்.

விண்ணப்பதாரர்களின் விவரங்களுக்கு செப்டெம்பர் 2 முதல் செப்டம்பர் 9 வரை ஒன்லைன் முறையின் மூலம் திருத்தங்களைச் செய்யலாம்.

பொலிஸ் தலைமையகம்: 0112421111
பொலிஸ் அவசர பிரிவு: 119
ஹாட்லைன் (தேர்வுகள் துறை): 1911
பரீட்சை ஆணையாளர் நாயகம் அலுவலகம்: 0112785211, 011275212
பள்ளி தேர்வு ஏற்பாடு கிளை - 0112784208 / 0112784537

13ஆவது திருத்தம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டால்

# “பாதுகாப்பு சவால்களை சந்திக்கும்”



■ நூருல் ஹுதா உமர்

13ஆவது சீர்திருத்தத்தில் உள்ளதை போல, காணி பொலிஸ் அதிகாரத்தை தருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாக்குறுதி வழங்கியிருக்கிறார். இலங்கை போன்ற ஒரு சிறு நாட்டில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குகின்ற போது, அதை எவ்வாறு சிறந்த முடிவாக பார்க்க முடியும் என்று எனக்கு தெரியவில்லை என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம்.முஸ்தபா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒருவர் கொழும்புக்கு வருவதாக இருந்தால் 400 கிலோ மீட்டர்களை தாண்டி கிட்டத்தட்ட நான்கு மாகாண பொலிஸ் படையினரைக் கடந்து வர வேண்டும். இலங்கையின் கொரோனா காலத்தை பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு செல்வதற்குப் பல சோதனை சாவடிகளைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. 13ஆவது திருத்தம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டால் அப்படியான நிலை தான் வரும். இதைத் தாண்டி இலங்கை பல பாதுகாப்பு சவால்களைச் சந்திக்கும் என்பது வெளிப்படை உண்மை என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணிலை விக்ரமசிங்கவை ஆதரித்து “இயலும் ஸ்ரீலங்கா” பிரச்சாரத்தில் இளைஞர்கள் மத்தியில் அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை எங்களின் ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி உட்பட முக்கிய முக்கிய பல அரசியல் கட்சிகள் ஏன் ஆதரிக்கிறார்கள் என்பதும் ஏன் நாங்கள் ரணிலை ஆதரிக்க வேண்டும் என்பதும் எல்லோரும் அறிந்த விடயமே. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டினை பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாக்கி விட்டு பலரும் இந்த நாட்டிலிருந்து ஒதுங்கி இருக்கிறார்கள்.

அப்படி இருந்த சூழ்நிலையில், ஒரு தனி ஆளாக பாராளுமன்றத்துக்குள் நுழைந்த ரணில் விக்ரமசிங்க அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் இந்த நாட்டை நல்ல நிலைக்குக் கொண்டு வந்தார். எனவே எதிர் வருகின்ற ஐந்து ஆண்டுக்கு அவரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று வாக்களிப்பது ஒரு பொருட்டாக இருந்தாலும் கூட, கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த இலங்கையை நல்ல நிலைக்குக் கொண்டு வந்தார் என்பதற்காகத் தாய் நாட்டை நேசிக்கும் இலங்கையரான நாங்கள் அவருக்கு வாக்களிக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். இது எமது தார்மீக கடமையாகும் என்றார்.



# மஹா யாகம்

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹா யாகம் வியாழக்கிழமை (12) அன்று அதிகாலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது. புதன்கிழமை (11) காலை 8 மணிமுதல் கிரியைகள் ஆரம்பமாகும்.

தென்மராட்சி இந்து அந்தண குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் விசேடகுருமார்கள் இந்த மஹா யாகத்தில் பங்கேற்கவுள்ளனர் .இந்த மஹாயாகத்தில் விஷேட 108 திரவிய ஹோமமும் விஷேட 108 திரவிய அபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

# ஆளுநரை சந்தித்தது தேர்தல் கண்காணிப்பு குழு

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் யாழிலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து திங்கட்கிழமை (09) சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வடக்கு மாகாணத்தின் கள நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

சுதந்திரமான மற்றும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என ஆளுநர் கூறியுள்ளார்.

மேலும், அமைதியான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த ஆளுநர், மக்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினரிடம் தெளிவுப்படுத்தியுள்ளார்.



# மூத்த சட்டத்தரணி சடலமாக மீட்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் தனிமையில் வசித்து வந்த மூத்த சட்டத்தரணி அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியை சேர்ந்த கனகசபாபதி நமநாதன் (வயது 86) எனும் சட்டத்தரணியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது மனைவி கடந்த சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில், வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், திங்கட்கிழமை (09) இவருக்கு உணவு கொண்டு சென்றவர், வீட்டில் இவரது நடமாட்டத்தைக் காணாது, அயல் வீட்டுக்காரர்களுக்கு அறிவித்து, வீட்டினுள் சென்று பார்த்த போது அவர் நிலத்தில் விழுந்து உயிரிழந்த நிலையில், காணப்பட்டுள்ளார். இதனையடுத்து, கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# போதைப்பொருள் பாவனை தடுப்பு பதாகைகள் திறந்து வைப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

சட்டவிரோத போதைப்பொருள் பாவனை, விற்பனை மற்றும் உற்பத்தி சம்பந்தமான முறைப்பாடுகள் மற்றும் அதன் பாதிப்பிற்கான உளவளத்துணை, சிகிச்சை, புனர்வாழ்வு தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கத் தொடர்பு கொள்ளவேண்டிய நிறுவனங்கள் மற்றும் தொடர்பு இலக்கங்களைக் காட்சிப்படுத்தும் பதாகைகள் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.முரளிதரனால் திங்கட்கிழமை (09) அன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.



இதில் சட்டவிரோத போதைப்பொருள் பாவனை, விற்பனை மற்றும் உற்பத்தி தொடர்பான தகவல்களை உடனுக்குடன் சம்மந்தப்பட்ட திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தும் துரித இலக்கமான 1927ஐ காட்சிப்படுத்தும் பதாகை மற்றும் அதனோடு தொடர்புடைய திணைக்களங்களைத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் கொண்ட பதாகைகள் என்பன திறந்து வைக்கப்பட்டன.

மேலும், போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடல், அதன் பாவனை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சிகிச்சை மற்றும் உளவளத்துணை ஆலோசனைகள், புனர்வாழ்வு போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளவும் இப்பதாதைகளால் வழிகாட்டப்பட்டுள்ளன.

சாரணிய இயக்கத்தின் ஜனாதிபதி விருதுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியின் சாரணிய மாணவன் விநுசியாமின் முன்னெடுக்கப்படும் சமுகசேவை திட்டம், போதையொழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அவசர இலக்கங்களைக் காட்சிப்படுத்தும் வேலைத்திட்டம் என்பன மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு அம்சமாகவே இப்பதாதைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# அரியவகை உயிரினமான நன்னீர் நாய் கண்டுபிடிப்பு

■ பாறுக் ஷிஹான்

நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் ஒன்று கடந்த சனிக்கிழமை(7) பிடிபட்டு பின்னர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த உயிரினம் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரில் உள்ள தனியார் வாகன திருத்தும் இடத்திற்கு வழி தவறி சென்ற நிலையில் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட உயிரினம் நீர்நாய் வகையைச் சேர்ந்தது ஆகும். (Smooth-coated Otter) இது தோற்றத்தில் பெரிய உடலைக்கொண்டிருக்கிறது. இது பொதுவாக லெட்ரொகலே இனத்தின் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது இந்திய துணைக்கண்டத்திலும் மேலும் தென்கிழக்கு ஆசிய பகுதியில் அமைந்துள்ள நாடுகளிலும் காணப்படகூடியதாகும். மற்ற நீர் நாய்களை விட இதன் மேல் உள்ள முடிகள் குறைவாகவும் மிருதுவாகவும் காணப்படுகிறது.



TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

25th anniversary

மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் 2023

தேசிய பத்திரிகையொன்றில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்குமிடையில் தமது ஆக்கங்கள், கேலிச் சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் பிரசுரமான விண்ணப்பதாரிகளுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 என்ற அடிப்படையில் பத்திரிகையிலிருந்து வெட்டப்பட்ட தமது ஆக்கங்கள், கேலிச்சித்திரங்கள் மற்றும் புகைப்படங்களின் பகுதிகளை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட அசல் விடயதானங்களைப் பெறுவது சாத்தியமற்றிருப்பின் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பக் கோரப்படுகிறது.

சுயாதீன நடுவர்கள் குழுவொன்று வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கான பிரிவுகளுக்காக அல்லது விண்ணப்பப்படிவத்துக்கு இதனுடன் இணைக்கப்பட்ட கியூ.ஆர். குறியீட்டை ஊடுருவல் செய்யவும். மேலதிக தகவல்களுக்கு www.slpi.lk அல்லது www.pccsl.lk க்கு பிரவேசிக்க வேண்டும்.

**விடயதானங்களைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 30, 2024 ஆகும்.**

அனைத்து விடயதானங்களும் சரியான முறையில் கோப்பாக்கம் செய்யப்பட்டு (தளர்வான கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) அவைத் தலைவர், அதிசிறந்த ஊடகவியல் விருதுகள் 2023, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை (கிருள்ள வீதி), கொழும்பு 5 என்ற முகவரியில் கையளிக்கப்பட வேண்டும்.

# வார்த்தைகள், செயலால் மக்களை வாழ வைப்பவராக இருங்கள்

“இழந்த விடயங்கள் சிறந்தவை அல்ல, வாழ்க்கையில் சிறந்தவை ஒருபோதும் இழக்கப்படுவதில்லை” என்பார்கள், ஆனால், அந்த விடயங்கள் எதுவும் உங்கள் வாழ்க்கையின் வழியில் வர வேண்டாம். ஏனென்றால், வாழ்க்கையை எக்காரணம் கொண்டும் வீணாக்கக் கூடாது. என்பதை உணர்த்தும் வகையில்தான், ஒவ்வோர் ஆண்டும், செப்டெம்பர் 10ஆம் திகதியன்று உலக தற்கொலை தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மக்களின் மனநலப் பிரச்சினைகள், இதர பிரச்சினைகள் போன்றவை வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டிய நாளாகும். உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி, உலகில் ஒவ்வோர் ஆண்டும் 726,000க்கும் அதிகமானோர் தங்கள் உயிரை மாய்த்து கொள்கின்றனர். இலங்கையை பொறுத்தவரையில், 2022ற்கான தரவுகளின் பிரகாரம், 100,000 பேருக்கு 15 பேர் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர்.

ஒவ்வொரு மரணத்தின் பின்னும், அவர்கள் தங்கள் சொந்த வேதனையான மற்றும் சோகமான கதையை உலகத்திலிருந்து மறைக்கிறார்கள்.

ஒருவர் ஏன் இப்படி ஒரு முடிவை எடுக்கிறார் என்பதை முதலில் தெரிந்து கொள்வோம்.

ஒவ்வொருவரும் தங்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்சினைகள் பலதரப்பட்டவை. பதில்களைத் தேட பல்வேறு வழிகள் உள்ளன. சில சமயங்களில் ஒருவர் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையின் இறுதிக் கட்டத்திற்குச் செல்லும்போது, அத்தகைய முடிவை எடுக்க வேண்டியிருக்கும்.

அந்த நேரத்தில், அந்த நபரின் முடிவைப் பற்றி சுற்றியுள்ள சமூகம் சொல்வதைக் கேட்கிறோம். குறிப்பாக அந்த நபர் எதிர்கொண்ட பிரச்சினையின் நீளம், அகலம், ஆழம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளாமல், இன்னொருவரின் முடிவைத் தீர்ப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஆனால், மக்கள் அதைத்தான் செய்கிறார்கள்.

உண்மையில் ஒருவன் ஒரேயடியாக முடிவெடுப்பதில்லை, வந்து போவது இனம் சார்ந்த முடிவு அல்ல. பல படிகளைக் கடந்து அங்கு செல்கிறார். ஒருவேளை இந்த நேரத்தில் உங்களுக்கு நெருக்கமான ஒருவர் அதை நோக்கி ஒரு படி எடுத்துக்கொண்டிருக்கலாம். தயவுசெய்து அந்த நபரை அடையாளம் காணவும். அந்த நபரைக் கவனமாகக் கேளுங்கள். பெரும்பாலான நேரங்களில், யாரோ ஒருவர் சொல்வதைக் கேட்பது, நன்றாகக் கேட்பது, பெரிய விஷயமாக இருக்கலாம். அந்த நேரத்தில் ஒருவருக்குத் தேவைப்படுவது கேட்பது மட்டுமே.

எனவே, நீங்கள் அந்த நபரைக் கவனமாகக் கேட்கலாம், அந்த நபரைத் தொந்தரவு செய்யும் பிரச்சினையைக் கேளுங்கள், ஒரு வார்த்தையால் அந்த நபருக்கு வலுவாக இருக்க முயற்சி செய்யுங்கள். வார்த்தைகள் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்கள். அவர்கள் ஒருவரைக் கூட கொல்லலாம். சாகப்போகும் ஒருவரை வாழவைக்கவும் முடியும். வார்த்தைகளாலும் செயலாலும் மக்களைக் கொல்பவராக இருக்காதீர்கள், மக்களை வாழ வைப்பவராக இருங்கள்.

கடினமான காலங்களைப் பிடிப்போம், அதைத் தாங்குவோம், நம்மை நம்புவோம், எல்லாம் சரியாகும் அழகான நாட்களைக் கண்டுபிடித்து முன்னேறுவோம். ஒரு நாள் நீங்கள் உலகிற்குச் சொல்ல ஒரு கதை இருக்கும். அந்த நாளில், உங்கள் வாழ்க்கையின் கடினமான நாட்களைக் கடந்து செல்லும் உங்களைப் போன்றவர்களுக்கு அந்தக் கதை ஊக்கத்தையும் பலத்தையும் தரும். விட்டுவிடாதே. பொறுமையாக இருங்கள் மற்றும் நம்பிக்கையுடன் முன்னேறுங்கள். இழந்த விடயங்களுக்கும், விட்டுச் சென்ற மக்களுக்கும், கடினமான நாட்களுக்கும் நன்றி சொல்ல ஒரு நாள் வரும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மனிதர்கள் தங்களைப் பற்றிய விடயங்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. அதாவது, சுய அலசல் செய்துகொள்ள வேண்டும்.

நான் யார்? எப்படி வாழ்கின்றேன்? அன்பானவரா? சுயநலவாதியா, இரக்க குணம் உள்ளதா? கல்வியில் நாட்டம் உள்ளதா? அதீத ஆசைகள் கொண்டவரா? ஒழுக்கசீலரா போன்ற கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டு, உண்மையான விடையைத் தேடவெண்டும்.

உங்களுக்கு நீங்கள் எதிரியாகக் கூடாது. மனச்சாட்சிக்கு கௌரவம் அளிக்க வேண்டும். உங்களை நீங்களே அறிந்தால், உண்மைகள் வெளிப்படும், கெட்டவைகளைத் துறந்து விடுவீர்கள்.

வாழ்க்கை என்பது சிக்கலானது என எண்ணலாகாது.

நல்லபடி வாழ்ந்தால் வாழ்க்கை சுலபமானது. தன்னைத்தான் வெறுக்கும் நிலை வரக்கூடாது.

அற வாழ்க்கை வாழ்ந்தால், உலகமே உங்களை நோக்கும்.

மானுட சக்தி அபாரமானது.

நல்ல செயல்களைச் செய்யவல்லது. எதையும் எதிர்பார்க்காது சுயநலமற்ற வாழ்க்கையை உருவாக்க வேண்டும்.

புது உலகை நிர்மாணிக்கப் புறப்படுக!

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

தேர்தல் வாக்குறுதிகளைப் பார்க்கிலும்

# வரலாறே முக்கியம்

செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில், 38 வேட்பாளர்கள் (கடந்த 22ஆம் திகதி காலஞ்சென்ற டொக்டர் ஐ.எம்.இல்யாசைத் தவிர) போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், அவர்களில் பெரும்பாலானோர் இது வரை ஒரு பிரசார கூட்டமேனும் நடத்தவில்லை என தெரிய வந்துள்ளது.

தெற்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட சர்வஜன கட்சியின் வேட்பாளர் திலித் ஜயவீர ஆகியோரும் வடக்கில் தமிழ் பொது வேட்பாளர் பி.அரியநேத்திரனும் மட்டுமே பிரசார கூட்டங்களை நடத்துவதாகத் தெரிகிறது.

மேலும், சில வேட்பாளர்கள் தாமும் களத்தில் இருப்பதைக் காட்டுவதற்காக ஏதாவது செய்கிறார்கள்.

இதேவேளை, இவ்வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களையும் வெளியிட்டு இருக்கிறார்கள். ஒருபோதும் இல்லாதவாறு இம்முறை இந்த தேர்தல் விஞ்ஞாபனங்களில் பொருளாதார பிரச்சினையே குறிப்பாகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது எவ்வாறு என்பதே முன்னுரிமை பெற்றுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியே அதற்கான காரணமாகும்.

இந்த விடயத்தில் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை என்னவென்றால் தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்று முன்வைக்கப்பட்டுள்ள வாக்குறுதி பட்டியல்களை எவ்வாறு நம்புவது என்பதேயாகும். ஏனெனில், பல தசாப்தங்களாக ஒவ்வொரு தேர்தலிலும் அரசியல்வாதிகள் வழங்கிய வாக்குறுதிகளை அவர்கள் பதவிக்கு வந்து நிறைவேற்றவில்லை. அல்லது அவர்கள் ஒரு சில வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கலாம். ஆனால், அவர்களது வாக்குறுதிகளின் பொதுவான நோக்கமான வளமான வாழ்க்கை என்பதற்கு எதிராகவே அவர்கள் பதவிக்கு வந்து செயற்பட்டுள்ளனர்.

1970களுக்கு பின்னரான 45 ஆண்டு கால வரலாற்றை எடுத்துக் கொண்டால், மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. 1960களில் நாட்டில் பெரும்பான்மையான ஏழைகளுக்கு வாரமொருமுறை ஒரு நபருக்கு இரண்டு கொத்து (சுமார் ஒரு கிலோ) வீதம் அரிசி மானிய விலைக்கு வழங்கப்பட்டு வந்தது. 1965இல் பதவிக்கு வந்த பிரதமர் டட்லி சேனாநாயக்கவின் அரசாங்கம் அதில் ஒரு கொத்து அரிசியை மட்டும் இலவசமாக வழங்கி மற்றைய ஒரு கொத்து மானிய அரிசியை இரத்து செய்தது. இது பெரும்பாலான மக்களை வெகுவாக பாதித்தது.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினதும் அதன் தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியினதும் தலைவியான சிறிமா பண்டாரநாயக்க ‘சந்திர மண்டலத்திலிருந்தேனும்’ கொண்டு வந்து முன்னர் போல் இரண்டு கொத்து அரிசியை மானிய விலையில் வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்தார். இது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முக்கிய வாக்குறுதியொன்றாக இன்னமும் பேசப்படுகிறது.

ஐக்கிய முன்னணி அத்தேர்தலில் வரலாற்றில் முதன்முறையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பெற்று பதவிக்கு வந்த போதிலும், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அந்த ஆட்சிக் காலத்தில் நாட்டில் வரலாறு காணாத உணவுப் பஞ்சமும் ஏற்பட்டது.

எனவே, 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்த வாக்குறுதி மீறலைக் கடுமையாக விமர்சித்த ஐக்கிய தேசிய கட்சி, தாம் பதவிக்கு வந்தால் வாரத்துக்கு ஒரு நபருக்கு எட்டு இறாத்தல் (அக்காலத்தில் இலங்கையில் மெற்றிக் அளவீட்டு முறை அமுலில் இருக்கவில்லை) வீதம் தானியம் மானிய விலையில் வழங்குவோம் என்று வாக்குறுதியளித்தது.

ஐ.தே.க. அத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்தது. ஆனால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மாறாக, ஐ.தே.க. பொதுத் தேர்தலை நடத்தியது. தொடர்ந்து 17 வருடங்களாக மோசமான கொடுங்கோல் ஆட்சியொன்றை நடத்தியது. எனவே, வயிற்றுப் பசியைப் பார்க்கிலும் ஜனநாயக உரிமைகள் முன்னிலை பெற்றது. அதன் விளைவாக 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, ஸ்ரீலசுக உள்ளிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கூட்டணி நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதை தமது முதன்மை வாக்குறுதியாக முன்வைத்தது.

62 வீத வாக்குகளைப் பெற்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி சந்திரிகா குமாரதுங்க அத்தேர்தலில் ஜனாதிபதியானார். ஜனாதிபதித் தேர்தலொன்றில் அந்தளவு மக்கள் ஆதரவு பெற்றவர் சந்திரிகா மட்டுமே. எனினும், அவர் தமது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் அதே வாக்குறுதியை வழங்கினார். ஆயினும், அதனை நிறைவேற்றவும் இல்லை அதற்கான பாராளுமன்ற பெரும்பான்மை அவரிடம் இருக்கவும் இல்லை.

அதனை அடுத்து 2005 மற்றும் 2010 ஆம் ஜனாதிபதித் தேர்தல்களின் போது, மஹிந்த ராஜபக்ஷவும் இதே வாக்குறுதியை வழங்கினார். 2010ஆம் ஆண்டு அதற்காக அவரது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்தும், அவர் அதனை நிறைவேற்றாது தமது அதிகாரங்களை மேலும் அதிகரித்துக்கொள்ளும் வகையில் அந்த பெரும்பான்மை பலத்தைப் பாவித்தார்.

இவ்வாறே 2015ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதாக மைத்திரிபால சிறிசேனவும், வளமான நாட்டை (சௌபாக்கியயே தெக்ம) உருவாக்குவதாக 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவும் வாக்குறுதியளித்தனர். இவ்வாறு தொடர்ந்து பல தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்கி இறுதியில் 2022ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. இந்த வரலாற்றை மறந்து தேர்தல் விஞ்ஞாபனங்களை நம்புவதா? என்ற கேள்வி மக்கள் முன் உள்ளது.

இன்றைய ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இருக்கும் பிரதான கட்சிகளில் ஐ.தே.கவின் வரலாறும் ஐக்கிய மக்கள் சக்தியின் வரலாறும் ஒன்றாகும். ஏனெனில், 2020ஆம் ஆண்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்றது. அந்தப் பிளவும் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள் காரணமாக ஏற்படவில்லை. அது கட்சித் தலைமை பதவிக்காக ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையே ஏற்பட்ட பலப் போரின் விளைவாகும். எனவே, ஐ.தே.கவின் கடந்த காலத்துக்கான பொறுப்பிலிருந்து தற்போதைய ஐதேகவுக்கோ ஐ.ச.மவுக்கோ தப்பிவிட முடியாது.

அக்கட்சி இனப் பிரச்சினையைப் பற்றி இன்று எதைக் கூறினாலும், பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்க்கக் கூடிய நிலையிலிருந்த அப் பிரச்சினையை பாரிய யுத்தமாக மாற்ற ஜே.ஆர்.ஜயவர்தனவின் தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தின் கொடிய அடக்குமுறையே காரணமாகியது. சஜித்தின் தந்தையான ரணசிங்க பிரேமதாசவும் ரணில் விக்ரமசிங்கவும் அந்த அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களாக இருந்தனர்.

அந்த அரசாங்கம் உரிய முறையில் நடவடிக்கை எடுத்திருந்தால். 1977, 1981 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்திருக்கலாம். 1983ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் திகதி புலிகள் 13 இராணுவத்தினரைக் கொன்றபோது, அவர்களில் உடல்களை அவரவரது கிராமங்களுக்கு அனுப்பாது அவற்றைக் கொழும்புக்கு கொண்டு வந்தமை பிரச்சினையை ஊதிப்பெருக்கி பெரும்பான்மை மக்களைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டதற்குச் சமமாகும். அதன் விளைவை நாடு பின்னர் அனுபவித்தது. இந்தப் போரின் போது, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை எங்கும் அறிக்கையிடப்படவில்லை. சில அறிக்கைகளின் படி, இவ்வெண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாகும்.

அதேபோல், ஜனநாயக நீரோட்டத்தில் இருந்த மக்கள் விடுதலை முன்னணியை எவ்வித ஆதாரமுமின்றி, கருப்பு ஜூலை கலவரத்தோடு தொடர்புபடுத்தி தடை செய்து அதனை மீண்டும் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளியதும் ஐ.தே.கவேயாகும். பின்னர் அக்கிளர்ச்சியை அடக்குவதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 60,000க்கும் அதிகமாகும் என கூறப்படுகிறது.

1989ஆம் ஆண்டு ரனசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், நாட்டில் பல பகுதிகளில் வீதிகளில் பிணங்கள் சிதறிக் கிடந்த காட்சி அக்காலத்தில் பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருந்தது. பட்டலந்த, எலியகந்த போன்ற சித்திரவதை முகாம்களைப் பற்றி எத்தனையோ கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சியின் போது, சுதந்திர வர்த்தக வலயங்கள், பாரிய நீர்த் தேக்கங்கள் அமைக்கப்பட்ட போதிலும், அதிகரித்து வந்த கடன் சுமைக்கு அது எவ்வகையிலும் பரிகாரம் ஆகவில்லை. அதன் பின்னர் 2021ஆம் ஆண்டும் 2015ஆம் ஆண்டும் ஐ.தே.க. ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஐ.தே.க. ஆட்சி அமைத்தது. சஜித்தும் அரசாங்கங்களில் அமைச்சராக இருந்தார். இன்று போலவே வாக்குறுதிகளை வழங்கி அவ்வாறு பதவிக்கு வந்தாலும், அபிவிருத்தி என்று எதுவுமே நடைபெறவில்லை. அக்காலத்திலும் அதிகரித்து வந்த கடன்களே 2022ஆம் ஆண்டு நாட்டை பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளியது.

பொதுஜன முன்னணியின் வரலாற்றைப் பற்றி இந்நாட்டு சிறுபான்மை மக்களுக்குப் புதிதாக எதையும் கூறத் தேவையில்லை. மக்கள் விடுதலை முன்னணி சந்திரிகாவின் காலத்தில் 14 மாதங்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்று முன்மாதிரியாக நடந்து காட்டியுள்ளது. வன்முறை அரசியலைக் கைவிட்டு சுமார் 35 ஆண்டுகளாக ஜனநாயக அரசியலிலும் முன்மாதிரியாக இருந்து காட்டியுள்ளது. தமது பழைய பிழையான நிலைப்பாடுகளையும் படிப்படியாகக் கைவிட்டு வந்துள்ளது. ஆயினும், அக்கட்சி பூரண அதிகாரத்துடன் இது வரை ஆட்சியில் இருந்ததில்லை. அவ்வாறான நிலையில் நிலைமை என்னவாகும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கடிதங்கள்

### பத்தினி புரம்:
### குப்பை மேடு பிரச்சினையை தீர்க்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்தின், தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட பாலம்போட்டாறு பத்தினிபுரம் பகுதியில் அமைந்துள்ள குப்பை மேடு பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் அமைந்திருக்கும் பாலம்போட்டாறு குப்பை மேட்டுக்கு, பல இடங்களிலிருந்து கொண்டுவரும் குப்பைகளை, வீதியோரத்தில் கொட்டுவதால், துர்நாற்றம் வீசுவதாகவும் யானைகளில் தொந்தரவுகள் அதிகரித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக, பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்து தெரிவிக்கையில், “பாலம்போட்டாறு பத்தினிபுரம் பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் குப்பை மேடு அமைந்துள்ளது. இதனால் வீசுகின்ற துர்நாற்றம் காரணமாக, பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் அப்பகுதியில் வசிப்போரும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள். குப்பை மேட்டிலிருந்து, பத்தினிபுர கிராமத்துக்கு 200 மீட்டர் தூரம் உள்ளது. பகல் நேரங்களில் வரும் காட்டு யானைகள், இரவு நேரங்களில் கிராமத்துக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துகின்றது. பல தடவைகள் பிரதேச சபைக்கு அறிவித்தும், இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை” என்றார்.

எனவே, இப்பகுதி மக்களின் நலன் கருதி, விரைவில் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதிக்கப்படும் பத்தினிபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- எப்.முபாரக்

## திரைப்படவிமர்சனம்

# ரஷோமொன்



சி.கதீசனா,
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

**‘ரஷோமொன்’ அகிரா குரோசாவாவால் தயாரிக்கப்பட்டு 1950இல் வெளியிடப்பட்டது. இது குரோசாவாவின் கையெழுத்து நடிகரான டோஷிரோ மிஃபுனேவை உற்று நோக்கியது. இவர்கள் இருவரும் இணைந்து நடித்த ஐந்தாவது படம் ரஷோமொன். 1952ஆம் ஆண்டில், ‘மிகச் சிறந்த வெளிநாட்டு மொழி’ திரைப்படத்திற்கான அகாடமி விருதை வென்றது.**

ரஷோமோனின் தனித்தன்மையானது உத்வேகத்தின் இரண்டு முக்கிய ஆதாரங்களின் கலவையிலிருந்து உருவாகிறது. ஒருபுறம் ஜப்பானிய பாரம்பரிய இலக்கியம், மறுபுறம் அமெரிக்க சமகால சினிமா. உண்மையிலேயே ஈர்க்கப்பட்ட ஒரு இயக்குனரின் கைகளில், இந்த தாக்கங்கள் கலந்து, எல்லா முரண்பாடுகளையும் முறியடிக்கும் ஒரு திரைப்படமாக உருவாக்கப்பட்டது.

இத் திரைக்கதையின் கதைக் கருவைப் பார்க்கும் இடத்து, இத்திரையின் கதை மூன்று நபர்களைச் சுற்றி நகர்கிறது கணவன், மனைவி மற்றும் ஒரு கொள்ளைக்காரன் பற்றியது. இக்கதையில் ஒரு கொலை இடம் பெற்றிருக்கும் அந்த கொலையைச் செய்தவர் யார் என்பது அறிய முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. திரைப்படம் முழுவதிலும் கொலையாளி யார் என்பது அறியப்படாத ஒன்றாகவும் கொலை நிகழ்ந்த விதம் தொடர்பில் மூன்று பேரது பார்வையில் நோக்கப்பட்டுக் கதை நகர்ந்து செல்வதாகவும் அமைகிறது. இக்கதையினுடைய protaganist, Antoganists யார் யார் என்பது தெளிவாக அறிய முடியாத ஒன்றாகவே கதை நகர்ந்து செல்கிறது. மேலும், இக் கதையானது நிகழ்காலத்தினையும் , கடந்த காலத்தினையும் அடுத்தடுத்து பேசுவதாக இத்திரைப்படம் அமைகிறது.

கதையினுடைய கதைக்களத்தினை பொறுத்தவரையில் ஒரு காடு, பாழடைந்த வீடு போன்றவற்றில் மாறி மாறி இடம் பெறுவதாகக் கதைக்களம் மாறிக்கொண்டே இருக்கும். கதாபாத்திர கட்டமைப்பினை பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் தம் பக்கமுள்ள நியாயத்தினை நிரூபிக்க முயலும் போது எவர் மீதும் குற்றமில்லை எனும் வகையில் காட்சி பூர்வமாக நியாயப்படுத்தும் வகையில் காட்சிகள் அமையப் பெற்றிருக்கும். இத்திரைப்படம் வெளிவந்த காலத்தில் தொழில்நுட்ப முன்னடைவு இன்மை காரணமாக முழு திரைப்படம் காணப்படுகிறது. கெமரா ஒரு person போன்று நான்கு வெவ்வேறு கோணமான கதைகளையும் நோக்கி நகர்வது அத்துடன் கோபம், வெறுப்பு போன்ற உணர்வுகளைக் காட்டுவதற்காக closeup shot அதிக இடங்களில் கையாளப்படுகிறது. திரைப்படத்தின் conflict என்பது Human vs Human ஆகும். இது மனிதர்களிடையே இடம்பெறும் பிரச்சினைகளைக் காட்டுவதாகத் திரைக்கதை நகர்கிறது. இது நிகழ்காலத்தோடு ஆரம்பமாகி, கதை சொல்லும் பாணியில் கடந்த காலத்திலேயே பேசுவதாக அமைகிறது. கதையின் முடிவினை பொறுத்தவரையில் உண்மையான குற்றவாளி யார் என்பது விறகு வெட்டிக்கு மாத்திரமே தெரிந்த உண்மையாக அமைவதோடு அது பார்வையாளருக்கு இறுதி வரையில் சஸ்பென்ஸ் ஆக அமைகின்ற open ending திரைப்படம் ஆகும்.




கிகோரி எனும் விறகுவெட்டி மற்றும் தபி ஹோஷி எனும் துறவி, ராஷோமொன் நகர வாயிலின் கீழ் பெருமழைக்கு ஒதுங்கி அமர்ந்திருக்கும் காட்சியிலிருந்து திரைப்படம் துவங்குகிறது. அப்போது அங்கு வந்து சேரும் மற்றோர் நபரிடம், அந்த இருவரும் தாங்கள் அன்று கண்ட குழப்பமான கதை ஒன்றைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றனர். கிகோரி, மூன்று நாட்களுக்கு முன் காட்டிற்கு மரம் வெட்டச் சென்றபோது கொலை செய்யப்பட்ட ஒரு சாமுராயின் சடலத்தைக் கண்டதாகவும் அக்காட்சி தந்த பயத்தில் பதறியடித்துக் கொண்டு ஓடி அதிகாரிகளிடம் இது குறித்துத் தெரியப்படுத்தியதாகவும் கூறுகிறான். துறவியும், கொலை நடந்த அன்று தான் அச்சாமுராயும், அவனது மனைவியும் பயணம் போனதைக் கண்டதாகக் கூறுகிறான். இருவரும் நீதிமன்றம் முன்பு சாட்சியம் தர அழைக்கப்பட்டிருந்தனர்; நீதிமன்றத்தில், பிடிபட்ட கொள்ளையன் தஜோமாருவைக் இருவரும் சந்திக்கின்றனர். சாமுராயின் கொலைக்கும், அவனது மனைவியின் கற்பழிப்புக்கும் தானே பொறுப்பு என்று அந்தக் கொள்ளையன் கோருகிறான்.

ரஷோமோன் ஜப்பானியத் திரைப்பட வரலாற்றில் குறிப்பிடத்தக்கப் பகுதியாகும். இது அதன் காலத்தின் திரைப்படத் தயாரிப்பு விதிமுறைகளைச் சவால் செய்தது, ஆனால் அது ஜப்பானிய சினிமாவை வெளிநாடுகளில் பிரபலமாக்கியது. ரஷோமோன் ஜப்பானிய சினிமாவின் எல்லைகளையும், திரைப்படம் உருவாக்கும் கலையையும் ஒரே அடியில் விரிவுபடுத்தினார்.



# ‘சக்தி கிரவுன்’ ஒப்பந்தம்

இலங்கையின் இசைத்துறைக்கு மிக முக்கிய பங்களிப்பை செய்து வரும் சக்தி தொலைக்காட்சி, இளம் இசை திறமைகளை கண்டறிய பல்வேறு நேரடி நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றதுடன், இந்நிகழ்ச்சிகள் மூலம் வெளிவந்த பல இளைஞர்கள், இலங்கையின் இசைத்துறையின் முக்கிய அடையாளங்களாக விளங்குகின்றனர்.

சக்தி தொலைக்காட்சி, திறமையின் தேடல் நிகழ்ச்சியில் பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டு, புதிய இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. ஆரம்பத்தில் ‘பாட்டு பாடவா’, ‘இளையகானம்’, ‘சக்தி ரேடியோ சூப்பர் ஸ்டார்’, ‘சூப்பர் ஸ்டார்’, ‘இசை மகா யுத்தம்’, ‘சக்தியின் இசை இளவரசர்கள்’, ‘சக்தி குளோபல் சூப்பர் ஸ்டார்’, ‘சக்தி ஜூனியர் சூப்பர் ஸ்டார்’ ஆகிய நிகழ்ச்சிகள் புகழ்பெற்றதுடன், தற்போது அந்த பட்டியலில் ‘சக்தி கிரவுன்’ நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ‘சக்தி கிரவுன்’ இறுதி சுற்றுக்கு ஆறு போட்டியாளர்கள் தெரிவாகியிருந்தனர். இவர்களில் கண்டியைச் சேர்ந்த பிரணவி வெற்றியாளராக கிரீடம் சூடினார் .

இறுதிப் போட்டியில் பங்கேற்ற அறுவர், தமது சொந்த பாடல்களை நிகழ்ச்சியின் மேடையில் பாடினர். இந்த பாடல்கள், M Entertainment நிறுவனம் மூலம் உலகளாவிய அளவில் வெளியிடப்படவுள்ளதுடன், இதற்கான ஒப்பந்தம், 2024 செப்டெம்பர் 5ஆம் திகதி இரத்மலானை ஸ்டெயின் கலையகத்தில் இடம்பெற்றது.

# அமைச்சரவை முடிவுகள் சில

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை(09) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் சில...**




### கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளல்

இலங்கையின் நிதித்துறை உறுதிப்பாடு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 02 உபவேலைத்திட்டங்களின் கீழ் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கடன் தொகையை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக 2023.09.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2023 டிசெம்பர் ஆகும்போது முதலாம் உபவேலைத்திட்டத்திற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன் இரண்டாம் உபவேலைத்திட்டத்தின் கீழ் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக முற்கூட்டிய 12 கொள்கைச் செயற்பாடுகளை பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நிதியைப் பெற்றுக்கொள்ளல்

2015ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பல படிமுறை நிதியிடல் வசதியின் கீழ் மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய 03 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வேலைத்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டுச் செலவு 675 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆவதுடன் அவற்றில் 453 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. எஞ்சிய கடன்தொகையில் 93 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல்

கோதுமைத் தயாரிப்பின் போது எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் கோதுமை விதைகளில் 20 சத வீதமானவை தவிடாக அகற்றப்படுகின்றது. இவ்வாறு நீக்கப்படும் தவிடு, தவிட்டுத் துகள்களாக சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகளவான வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு இயலுமை கிடைக்கின்றது. அதற்காக, திட்டவட்டமான நடவடிக்கை முறையைக் கடைப்பிடிப்பதற்கு இருதரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் சீனாவின் சுங்கப் பொது நிர்வாகத்திற்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலங்கை ஏற்று அங்கீகரித்தல்

யுனெஸ்கோ நிறுவனம் அதன் உறுப்பு நாடுகளால் தயாரிக்கப்படுகின்ற கலாசார வெளியீடுகளின் பன்மைத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான யுனெஸ்கோ சமவாயம் 2005ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரைக்கும் 156 நாடுகள் இச்சமவாயத்தை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், இலங்கை இதுவரைக்கும் குறித்த சமவாயத்தை ஏற்று அங்கீகரிக்கவில்லை. யுனெஸ்கோ சமவாயத்தை ஏற்று அங்கீகரிப்பதைக் கருத்தில் கொள்வதற்காக நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவின் விதந்துரைகளுக்கு அமைய யுனெஸ்கோ (2005) சமவாயத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நிறுவனமொன்றை அறிமுகப்படுத்தல்

இலங்கையில் பெற்றோலியம், திரவப் பெற்றோலிய வாயு, திரவ இயற்கை வாயு மற்றும் உராய்வு எண்ணெய் போன்ற துறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான பொறிமுறையொன்றை நிறுவுதல் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.04.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காகுமான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### கருத்திட்ட முன்மொழிவு

இலங்கையின் மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் 22 மீன்பிடித் துறைமுகங்களில் மணலை அகற்றுவதற்கான விருப்பு மனுக்கோரல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2024.02.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் முகாமை செய்யப்படும் மீன்பிடித் துறைமுகங்களின் படுகைகளில் அகழ்வுச் சேவைகளை கட்டண அறவீடுகளின்றி மேற்கொள்வதற்கும், கிரிந்த, சிலாபம் மற்றும் வாழைச்சேனை போன்ற மீன்பிடித் துறைமுகங்களில் அகழ்வு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் வணிக ரீதியாகப் பயன்படுத்துவதற்கான கருத்திட்ட முன்மொழிவுக்கான விருப்பு மனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கு 03 கம்பனிகள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய கிரிந்த, சிலாபம் மற்றும் வாழைச்சேனை போன்ற மீன்பிடித் துறைமுகங்களில் கட்டண அறவீடுகளின்றி அகழ்வுகளை மேற்கொள்கின்ற ஒப்பந்தத்தை வரையறுக்கப்பட்ட சுப்ரீம் குளோபல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### வரியைத் திருத்தம் செய்தல்

எமது நாட்டுக்கு பண்டங்கள் இறக்குமதி செய்யும் போது, அறவிடப்படும் வரி வகைகளாவன, சுங்க இறக்குமதி வரி, செஸ் வரி, விசேட பண்டங்களுக்கான வரி மற்றும் துறைமுகங்கள் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி தொடர்பிலான கொள்கை ரீதியாக அமுல்படுத்த வேண்டியதும், மற்றும் சமகாலத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்நாட்டு கைத்தொழில் மற்றும் வணிகத் துறையிலுள்ள தரப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கீழ்வரும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது அதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### தொழில்நுட்ப மூலோபாயத் திட்டம்

சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கடன் வசதிகள் வேலைத்திட்டத்தின் கீழ் கட்டமைப்பு ரீதியான அளவுகோலாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும் தகவல் தொழில்நுட்ப மூலோபாயத் திட்டமொன்று, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு 2024ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இறுதிக்குள் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பது அவசியமாகவுள்ளது. அதற்கிணங்க, 2025-2027 காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மூலோபாயத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### வணிக நிலையங்களாக அபிவிருத்தி செய்தல்

அரச, தனியார் பங்குடமை முறையின் கீழ் கொழும்புத் துறைமுகத்தை அண்டியதாக அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்த, கொம்பனித்தெரு, தெஹிவல, மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய புகையிரத நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்க விருப்பம் தெரிவிக்கின்ற முதலீட்டாளர்களை அடையாளங் காண்பதற்காக விருப்புமனுக் கோரப்பட்டுள்ளது. அதில், இலங்கையில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள புகையிரத நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான விருப்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால், அரச-தனியார் பங்குடமை முறையின் கீழ் நாடளாவிய ரீதியில் ஏனைய புகையிரத நிலையங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான போட்டி அடிப்படையிலான முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டு தகைமையுடைய முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### அக்ரஹார பயன்களை அதிகரித்தல்

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மிகவும் கவர்ச்சிகரமான பயன்களுடன் கூடிய அரச ஊழியர்கள் மற்றும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் மிகவும் இலகுவாக வழங்கப்படும் வகையில் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 2024.08.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அனைத்து ஓய்வூதியர்கள் மற்றும் அரசதுறையிலுள்ள அனைத்து ஊழியர்களின் சம்பளத்தில் 1,000 ரூபா பங்களிப்புத் தொகையை அறவிட்டு தேசிய காப்புறுதி நிதியத்திற்கு வைப்பிலிடுவதற்கும், அதன்மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள விரிவான வசதிகளுடன் கூடிய மருத்துவப் பாதுகாப்புத் திட்டத்தை 2025ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்குமான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# இது யாருக்கு சொந்தம்...?

யோ.ஜோவர்ணன்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

"என்ர கைய இழந்த, இந்த மண்ண விட்டு நான் போகவே மாட்டேன்.... எங்கட துறையில மட்டுந்தான் நாங்கள் தொழில் செய்வம்..." வரலாற்று ரீதியாகவும் காலங் காலமாகவும் அதிகாரம் கொண்டவர்கள், அதிகாரமற்ற, குரலற்ற, ஒடுக்கப்பட்ட மக்களை மௌனிக்க வைப்பது புதிய விடயமயல்ல என்பது அறிந்ததொன்றே. இலங்கையிலும் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனமான தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது. அதிகமாக இடம்பெறுகின்ற ஒரு துயர விடையமாக இருக்கையில், தமிழர் வாழும் நிலப்பரப்பை தமிழர் ஒருவரே ஆக்கிரமிக்க முனைவது என்பது அதிர்ச்சியூட்டும் புதியதொரு விடயமாகவேயுள்ளது.

ஈழ மண்ணின் வட புலத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் நிலப்பரப்பளவில் முதலிடத்தில் வகிப்பதும், இறுதி யுத்தத்தின் போது, பாரிய உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் சந்தித்த மாவட்டமே முல்லைத்தீவாகும். இங்கு சூரியன் உதயமாகின்ற கிழக்குக் கடற்கரைப் பகுதி, இயற்கையின் கொடையாகிய கடலன்னையை, 70 கிலோ மீட்டர் நீளம், தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஒன்றே. தியோகு நகராகும். கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இக்கிராமதில் கடந்த 1983ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது, 'தியோகுப்பிள்ளை' எனும் கிறிஸ்தவ பாதிரியாரால் மக்கள் குடியமர்த்தப்பட்டமையினால் தியோகு நகர் என பெயர் சூட்டப்பட்டதென்பதே இக்கிராம மக்களின் கருத்தாகும். நீண்டகால யுத்தத்தினாலும் சுனாமி பேரலையினாலும் தாக்கப்பட்டு பல உயிர்களை பலி கொடுத்த இக்கிராமத்தில் வறுமையின் மத்தியில் தற்பொழுது 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 25 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலையே பிரதான ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

41 ஆண்டுகள் அதாவது நான்கு தசாப்தங்கள் கடற்றொழிலை நம்பியே வாழும் மீனவ சமூகம், கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து நிம்மதியற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அதாவது, கனடாவில் வசிக்கும் புலம்பெயர் தமிழர் ஒருவர், இக்கிராம மீனவர்கள் தொழில் செய்யும் இறங்கு துறைக்கு அருகில் தனியார் கம்பனி ஒன்றுக்காக, குறித்தளவு நிலப்பகுதியை விலைக்கு பெற்றுக்கொண்டு, சுற்றுலாத்தளத்தை (பல கட்டடங்கள்) அமைத்து வருகின்றார். அதுமட்டுமின்றி, கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் அல்லற்படுவதையும் இனங்கான முடிகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்து விட்டு, தொண்டு நிறுவனம் ஒன்றில் தொழில் புரிபவரும் கடற்றொழிலை பகுதி நேரமாக மேற்கொள்ளும் கிராமத்து மீனவரான கிருசாந், "எங்கட துறைக்கு பக்கத்துல சுற்றுலா விடுதிகளை அமைக்கிற தனியார் கம்பெனி, எங்கட இறங்கதுறையில், நாங்கள் வெயில் நேரத்துல நிழலுக்க இருந்து வல தட்றத்துக்கும், தொழில் முடிய வலை,கயிற நிழலுக்க, வைச்சிட்டு வீட்ட போகரத்துக்கும். ஒரு வாடிக்கொட்டில் போட்டா அதையும் புடிங்கி எறியிறாங்கள்..." என குமுறுகின்றார்.

நேரமோ மூன்று மணி, சூரியன் சற்று சரிவாகத்தான் வானத்தில் உள்ளது. எனினும் வெயிலின் சூடு சற்றும் குறையவில்லை. கடற்கரையில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என இருவர் மாத்திரமே. வலையை இழுத்து படகினுள் போடுகின்றனர். அதேவேளை, ஒரு கண்ணின் பார்வை இழந்த, மிகவும் மெலிந்த தோற்றம் கொண்ட அங்குள்ள அக்கிராமத்து மீனவரின் மனைவி, "மண்ணெண்ணயை சிலவழிச்சு, இரவிரவா கஷ்டப்பட்டு நித்திர முழிச்சு அஞ்சு, பத்து கிலோ மீன் பிடிச்சும், அதையும் வெயில நார வைக்கிற, மோசமான நிலையில தான் நாங்க இருக்கிறம்..." என கவலை தெரிவிக்கின்றார்.

இறுதி யுத்தத்தில் தனது ஒற்றை காலை இழந்து, இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில், மூன்று பிள்ளைகள் மற்றும் மனைவியினை, கடற்றொழில் செய்து, வளர்த்து வரும் கிராமத்து மீனவர் திரு. நகுலேஸ்வரன். "நாங்கள் கடலுக்கு போய் மீன் பிடிக்கிற தொழில மட்டும் செய்யல, கடக்கரையில ஏரல் கிண்டி, நண்டு புடிச்சு, தூண்டிலும் போட்டு, வலையும் வீசுவம். ஆனால் இப்ப எங்கட துறையில இதை செய்யவே பயமா இருக்கு...." என அஞ்சுகிறார்.

மேலும், குறித்த பிரச்சினை தொடர்பில் பிரச்சினையுடன் தொடர்புடைய தனியார் கம்பனியின் தரப்பினர், "இந்த இடத்தை நாங்கள் காசு கொடுத்து விலைக்கு வாங்கிட்டோம். இந்த இடத்திற்கு நேரேயுள்ள கடற்கரை வரை எங்களுடையது...." என உரிமை கூறுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவிலுள்ள, சிலாவத்தை தெற்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவரும், யுத்தத்தின்போது, தனது ஒரு கையை இழந்த மீனவருமாகிய யோகேந்திரன், "நான் பிறந்து, வளர்ந்து, உழைச்சது இந்த மண்ணில. இந்த மண்ணிலதான் என்ர கையை இழந்தனான். இந்த மண்ண விட்டுற்று போய், எங்கேயுமே தொழில் செய்ய மாட்டேன்..." என கண்ணீர் வடிக்கின்றார்.

இங்குள்ள மற்றுமொரு இக்கிராம மீனவரான, இராமகிருஸ்ணன், "இன்டைக்கு கோயில் திருவிழா அதனால எங்கட ஊரில யாருமே கடலுக்கு போக மாட்டோம். கிறிஸ்தவர்களின் தேவாலய பெருநாளின் போது, இந்துக்களும், இந்துக்களின் கோயில்த் திருவிழாவின் போது, கிறிஸ்தவர்களும் அந்த நாளை கடவுளுக்காக விட்டுட்டு யாருமே கடற்றொழிலிலுக்கு பேகமாட்டங்கள். இன்டைக்கு எல்லாருக்கும் விடுமுறை நாளாத்தான் இருக்கும்..." என கூறுவதிலிருந்து கிராமத்து மக்களின் ஒற்றுமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையின் கடற்கரையோர பாதுகாப்பு சட்டத்திற்கமைய, ஒவ்வொரு கரையோர பகுதியிலும், கடலிருந்து பாதுகாப்பு வலயமாக 100 அல்லது 200 மீட்டர் தூரம் உள்ளன. இந்த அளவு, ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு இடங்களின் கடற்கரையை பொறுத்து வேறுபடும்.

எனவே, குறித்த பகுதியை யாருமே சொந்த உரிமை கொண்டாட முடியாது.

குறித்த கிராமத்து மக்களின் பிரச்சினை தொடர்பாக, கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள. உதவிப் பணிப்பாளர். "சிலாபத்தை தெற்கு இறங்கதுறை, திடீரென வந்த இறங்குதுறை அல்ல, இந்த இறங்குதுறைக்கு நீண்ட வரலாறு உண்டு, மக்களின் உரிமை சும்மா பறிபோகக்கூடாது. எப்பொழுதும் நீதி வெல்லப்பட வேண்டும்" என கூறியிருந்தார்.

நீண்ட கால யுத்தத்தினாலும், சுனாமி பேரலையினாலும் தாக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து, தமக்குரிய அனைத்தையும் இழந்து, இன்று தமது வாழ்வைக் காத்துக்கொள்ள ஏங்கும் மக்கள், தமது இறங்குதுறைக்கு அருகில் சுற்றுலாத்தளம் அமைப்பதை விரும்புவதோடு, அதனை வரவேற்கின்றனர். சுற்றுலாத்தலங்கள் உருவாகும்போது, தமது கிராமமும் விருத்தியடையும். கிராம வளர்ச்சியுடன் தமது தொழில் நடவடிக்கை சிறப்பாக இடம்பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். ஆனால், இந்த சுற்றுலாத் தளத்தினை காரணம் காட்டி, தங்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடையூறு அல்லது தடை ஏற்படுத்த வேண்டாம் என்பதே இக்கிராம மக்களின் மனநிலையாகவுள்ளது.

எனவே, சம்மந்தப்பட்ட பிரச்சினையில் ஒவ்வொரு தரப்பினரிடமும் நியாயங்கள் இருக்கலாம். அவை மதிக்கப்பட வேண்டும்.

ஆனால், பொறுப்பதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இப்பிரச்சினையில் நியாயமான முறையில் தலையிட்டு, அமைதி வழியில் ஓர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி, மக்களின் இயல்பு வாழ்விற்கு ஆவன செய்யவேண்டியது. தற்போது மிக அவசியமானதொரு விடயமாகவே உள்ளது.





# கல் மனசு



சாந்தி ஜொ

சென்னையிலிருந்து அலங்காநத்ததிற்கு செல்லும் பேருந்தில் ஏறியதும் கிடைத்த இருக்கையில் அமர்ந்து பயணிக்கும் நான், இந்த முறை ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். போகும் வழியில் ரோட்டில் அவளை எங்கேயாவது காண்பேனா என சிந்தித்து கொண்டே பயணத்தை தொடங்கினேன். சாத்தியமா என்று தெரியவில்லை? போன வருடம் நடந்த அந்த நிகழ்ச்சி என் நினைவிலிருந்து இன்னும் நீங்கவில்லை. அவளின் குரல் என் காதில் கேட்டுக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வருட அலுவலக விடுமுறையின் போதும் அலங்காநத்தத்தில் உள்ள மாமாவின் வீட்டிற்கு செல்வது என் வழக்கம். போன வருடம் அங்கு சென்றபோது தான் அவளைக் கண்டேன். ஊரிலுள்ள பஸ் நிறுத்ததின் அருகில் அமைந்துள்ள சிந்தனையாளரின் சிலைக்கு கீழே அவள் அமர்ந்து இருந்தாள். அழுக்கேறிய தலையும், கிழிந்த சீலையும் உடுத்தி, வாயில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள். ஊரில் உள்ள ஒரு சில வீடுகளில் மிச்சமான சாப்பாடுகள் அவளுக்கு கிடைக்கும். அது போக, பஸ்சுக்காக காத்திருக்கும் சில பேர்களிடம் கை ஏந்தி பிச்சையும் எடுப்பாள். அவளுடைய இருப்பிடம் அந்த சிலையின் கீழ் உள்ள மண் தரைதான். ஒருநாள் மாமாவுடன் பக்கத்து ஊர் கடைக்கு சென்று இரவு ஊருக்கு திரும்பிய போது, அவள் யாரோ ஒருவருடன் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. கூர்ந்து கவனித்து பார்க்கையில், அவள் அழுது பேசிக் கொண்டிருப்பது அருகில் நின்று கொண்டிருந்த சிலையோடு என்பதை புரிந்து கொண்டேன்.

'என் மேல கோவமா இருக்கியா? மன்னிச்சுகோ. பக்கத்துல இருக்க சக்கரத்தாழ்வார் கோயில ஏதோ விசேசம் போல. நிறைய சனங்க சாமி கும்பிட வந்து இருந்தாங்க. எல்லாரும் சாப்புடு முடிஞ்சதும் நான் ஏதாவது சாப்புட கிடைக்கும்னு நின்னுட்டு இருந்தேன். அப்ப ஒருத்தன் வந்து இங்கலாம் நீ நிக்க கூடாதுனு சொல்லி என்னைய தள்ளிவிட்டான். பக்கத்துல இருக்க முள்ளு செடில விழுந்துட்டேன். அதான் கையில காயம். ஆனா தள்ளிவிட்டவன பார்க்கும் போது என் புள்ள

> “ அடுத்த நாள் காலையில் சிலை இருந்த இடத்தில் அவளை பார்ப்பதற்காக சென்றேன். அவள் அங்கு இல்லை. ரோட்டின் மறுபக்கம் போய் பார்த்தேன். அங்கேயும் அவள் இல்லை

மாதிரியே இருந்தான். என் புள்ள... என் புள்ள... என்ன செய்றானோ? அவன் என்னைய வீட்ட விட்டு துரத்திட்டான். ஆனா அவன என் மனசுல இருந்து துரத்த முடியல. அவன் நல்ல இருக்கணும். அது போதும் எனக்கு'

மாமாவிடம் அவளை பற்றி விசாரித்த போது 1 வருடமாக அந்த சிலைக்கு கீழே தான் அவள் பிச்சை எடுத்து உறங்குவாள் என்றும் பைத்தியக்காரதனமாக சிலையிடம் இப்படி பேசிக் கொண்டிருப்பாள் என்றும் சொன்னார்.

அடுத்தநாள் காலையில் அவள் அதே போல சிலையிடம் 'எல்லாரையும் கண்கொத்தி பாம்பு போல நீ பாத்துட்டு இருக்க. ஆனா ஒன்ன பாக்க என்ன தவிர யாரும் இல்லயே. உனக்கு நான் இருக்கேன், எனக்கு நீ இருக்க' என்று சிரித்து பேசிக் கொண்டிருந்தாள்.

அவள் உருவத்தை வைத்து பிச்சைக்காரி என சொன்னாலும் அவள் பேசுவதை கேட்கும் போது ஏதோ அவளிடம் போய் பேச வேண்டும் என்று எனக்கு தோன்றியது. மனம் அவளிடம் பேசு என்று சொன்னாலும் கால்கள் நகரவில்லை.

சில நாட்கள் கழித்து தெருவை அகலப்படுத்தும் திட்டத்திற்காக அதிகாரிகள் அங்கு பார்வையிட வந்து அந்த சிலையை அப்புறப்படுத்த சொல்லி ஆணையிட்டார்கள். சிலையை அப்புறப்படுத்த வந்த வேலையாட்கள் மீது அவள் மண்ணை வீசி எறிந்தாள். கோவமாக திட்டினாள். அழுது புரண்டாள்.

கடைசியில் அந்த வேலையாட்கள் அவளை தூக்கி ரோட்டின் மறுபக்கம் போட்டார்கள். அங்கு வந்த லாரியில் அந்த சிலை ஏற்றபட்டது. லாரி செல்லும் வரை கதறி கதறி அழுதாள்.

'அய்யோ... ஏன் சாமி என்னைய மனுசப் பிறவிய படச்சீங்க. எனக்கு யாரு இருக்க?' என்று கத்தினாள்.

> “ அவள் துணையாக நினைத்துக் கொண்டிருந்த சிலைக்கு கல் மனதா, அவளை துரத்திய மகனுக்கு கல் மனதா என்ற கேள்விகளோடும் அவளை இந்த வருடம் ஊருக்கு செல்லும் வழியில் பார்த்தால் பேச வேண்டும் என்ற ஏக்கத்தோடும் செல்கிறேன்

அடுத்த நாள் காலையில் சிலை இருந்த இடத்தில் அவளை பார்ப்பதற்காக சென்றேன். அவள் அங்கு இல்லை. ரோட்டின் மறுபக்கம் போய் பார்த்தேன். அங்கேயும் அவள் இல்லை.

அதன் பிறது சென்னைக்கு வந்த ஒரு வருடத்தில் அவளை பற்றி நினைவுகள் அடிக்கடி எனக்குள் தோன்றும். ஒன்றில் அன்பு வைக்கும் மனம் ஏன் அதை பிரிய மட்டும் அனுமதிக்க மாட்டேன் என்கிறது. பிரிவதில் அக்கறைக் காட்டும் சிலருக்கு ஏன் அன்பு புரிவதில்லை. அவள் துணையாக நினைத்துக் கொண்டிருந்த சிலைக்கு கல் மனதா, அவளை துரத்திய மகனுக்கு கல் மனதா என்ற கேள்விகளோடும் அவளை இந்த வருடம் ஊருக்கு செல்லும் வழியில் பார்த்தால் பேச வேண்டும் என்ற ஏக்கத்தோடும் செல்கிறேன்.



## துறவற தின நூற்றாண்டு விழா...

பெரியநீலாவணையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) சிறப்பாக நடத்தியது.

- வி.ரி.சகாதேவராஜா




## சோழன் உலக சாதனை படைத்த சிறுமி

மட்டக்களப்பு–கல்லடியைச் சேர்ந்த மாணவி காவ்யஶ்ரீ, (5 வயது 10 மாதங்கள்) கணக்குகளைச் செய்துகாட்டி சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.
இவர் மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வரிசைகளை கொண்ட 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கு 6 நிமிடங்கள் 50 வினாடிகளில் விடையளித்து சோழன் உலகசாதனை படைத்தார்.
இதற்கான நிகழ்வானது, மட்டக்களப்பு–கல்லடியில் அமைந்துள்ள கிரீன் கார்டன் ஹோட்டலில் வைத்து சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வை சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம், பீப ல்ஸ் ஹெல்பிங் பீப ல்ஸ் பவுண்டேஷன் மற்றும் கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவனம் போன்ற அமைப்புகள் இணைந்து நடத்தியிருந்தன.
சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் துணைத் தலைவர் ஶ்ரீ நாகவாணி ராஜா, மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் இன்பராசா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட துணைத்தலைவர் வரதகரன் போன்றோர். சோழன் உலக சாதனை படைத்த சிறுமிக்குச் சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை போன்றவைகளை வழங்கிப் பாராட்டினார்கள்.
இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க உலக சாதனை நிகழ்வின் முதன்மை விருந்தினராக மண்முனை வடக்கு பிரதேச செயலர் வ.வாசுதேவன் பங்கு கொண்ட அதேவேளை, நிகழ்வை கதிரவன் த.இன்பராசா தலைமையேற்று நடத்தினார்.
இச்சிறுமி, மட்டக்களப்பு, கல்லடியில் வசித்து வரும் பொறியியலாளர் சுப்ரமணியம் மற்றும் மருத்துவர் ஹிசாந்தினி ஆகியோரின் மகளாவார்.

## கண்ணகி முதியோர் சங்கம் புனரமைப்பு



காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கண்ணகி முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் காரைதீவில் சனிக்கிழமை (07) நடைபெற்றது.
இக்கூட்டத்திற்கு அப்பிரிவின் கிராம உத்தியோகத்தர் எஸ்.கஜேந்திரன் முதியோர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மதிசுதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
இதன்போது, புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டதோடு, சங்கத்தினர் சங்க உறுப்பின ஒருவருக்கு வைத்திய தேவைக்கான ஒரு தொகை பணமும் வழங்கி வைக்கப்பட்டது.
தலைவராக த.சிவானந்தராஜா (முன்னாள் இ.போ.ச உத்தியோகத்தர், ஊடகவியலாளர்), செயலாளராக இ.நடேசபிள்ளை (ஆடை வடிவமைப்பாளர்), பொருளாளராக த.வசந்தாதேவி மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

– வி.ரி. சகாதேவராஜா



## கின்னஸ் உலக சாதனை

**புகஜிந்தன்**

சாவகச்சேரி இந்து கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

'வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல்' என்னும் தலைப்பின் கீழான போட்டியிலேயே இந்த சாதனையை படைத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றின் மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி முடித்தே குறித்த சாதனையைப் புரிந்துள்ளார்.

கடந்த மே மாதம் 20 திகதி கொடிகாமத்தில் த்து வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாகக் குறித்த சாதனை நிகழ்வு காணொளியாகப் பதிவு செய்யப்பட்டு இணையத்தினுடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மூன்று மாதங்களின் பின் wrld guiness assesment commity மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு 28/8/2024 அன்று நிகழ்வு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கின்னஸ் சாதனைக்கான விண்ணப்பம் முதல் அனைத்து விடயங்களையும் குறித்த மாணவியே தனது சுய முயற்சியில் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கின்னஸ் சாதனை படைத்த மாணவியை அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேரடியாக அழைத்து சாதனை சான்றிதழைப் பார்வையிட்டுப் பாராட்டியிருந்தார்.

## மாணவர்களை பாராட்டி வரவேற்பு

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டி தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்களைப் பாராட்டி வரவேற்கும் நிகழ்வு திங்கட்கிழமை (09) அன்று பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

– எம்.ஏ.றமீஸ்





### கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்தில்

# மாணவர் பாராளுமன்ற தேர்தல்

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தல் கோவையின் அடிப்படியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் முறைமை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், தேர்தல்கள் திணைக்களமும் கல்வியமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் மாணவர் பாராளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மாத்தளை மாவட்டம் நாவுல கல்வி வலயத்திற்கு உட்பட்ட கம்மடுவ தமிழ் மகாவித்தியாலயத்தின் 2024ஆம் ஆண்டிற்கான மாணவர் பாராளுமன்றம் அமைப்பதற்கான வேட்பு மனுக்களைக் கோரப்பட்டுத் தேர்தல் பாடசாலை அதிபர் மாணிக்கம் தியாகராஜா தலைமையில் பாடசாலையில் வளாகத்தில் 2024.09.04 அன்று இடம்பெற்றது.

காலை 8 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகி மு.ப 10.30 மணிக்கு முடிவடைந்தது. மாணவர்கள் மிக அமைதியான முறையில் மிக நீண்ட வரிசைகளில் நின்று தமது வாக்குகளை ஆர்வமாகப் பதிவுசெய்துசென்றதனை காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் நடைபெற்ற பாடசாலை மாணவ தேர்தல் முறையானது தங்களுக்குப் புதுவிதமான அனுபவத்தைத் தந்ததாகவும் இதன் மூலம் தேர்தல் தொடர்பான தங்களது அறிவையும் ஆளுமையையும் அதிகரிக்க முடிந்ததாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

தரம் 6 முதல் 13 வரையுள்ள மாணவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு மாணவர் பாராளுமன்றம் ஸ்தாபிக்கப்படும். இதில் சபாநாயகர், பிரதமர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் என 95 மாணவ தலைவர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற இத்தேர்தலில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கு எண்ணும் நிலையத்திற்கு வந்தடைந்ததும் மு.ப. 10.45 மணிக்கு வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகியதுடன், 11.45 மணியளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மேலும், இத்தேர்தலில் மேற்பார்வையாளராக வலயக்கல்வி அலுவலகத்தின் இணைப்பாளர் ஆசிரிய ஆலோசகர் வீரசிங்கம்கலந்து கொண்டதுடன், அதிபரும் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் ஆணையாளருமான மாணிக்கம் தியாகராஜாவின் மேற்பார்வையில் நடைபெற்ற இத்தேர்தலில் பிரதி அதிபர் பிரதி தேர்தல் ஆணையாளராகவும் பிரதிஅதிபர்உள்ளிட்ட ஆசிரியர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்த மாணவர் பாராளுமன்ற தேர்தலை மிக நேர்த்தியாக திட்டமிட்டு ஆசியர் ஜயகுமார் ஷான் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு மிகவும் நேர்த்தியான முறையில் அனைத்து தேர்தல் பணிகளும் செய்து முடிக்கப்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கு ஜனநாயகமும் அதன் பொறுப்புக்களும், வாக்கு உரிமை, வாக்களித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் செய்முறை அறிவை பெற்றுக்கொள்வதுடன் ஜனநாயக ஆட்சி முறைமை, வாழ்க்கை முறைமையே அனுபவங்களுமாகத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் வலயம் இமாகாண மற்றும் தேசிய மட்டத்தில் உருவாக்கப்படும் மாணவர் பாராளுமன்றத்தின் அடிப்படை நோக்கமாகப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான செயல்பாடாக தற்போது பாடசாலை வலய மட்டத்தில் இமற்றும் மாகாண மட்டத்தில் கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தல் கோவையின் அடிப்படியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஹனோய்

## ஹனோயில் யாகியால்;
# பலியானவர்கள் எண்ணிக்கை 64ஆக உயர்வு

வடக்கு வியட்நாமின் குவாங் நின், ஹைடாங் மற்றும் ஹோ பின் ஆகிய கடலோர மாகாணங்களை தாக்கிய யாகி புயலால் பல் எண்ணிக்கை 64ஆக உயர்ந்துள்ளது.

மணிக்கு 149 கி.மீ வேகத்தில் காற்று வீசி தலைநகர் ஹனோயில் யாகி புயல் கரையை கடந்தது. இதனால் அங்குள்ள நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பி வழிந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர். 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தநிலையில், அங்குள்ள மலைபாங்கான காவ் பாங் மாகாணத்தில் மண்சரிவு ஏற்பட்டது. மேலும் அங்குள்ள ஆற்றின் குறுங்கே கட்டப்பட்டிருந்த இரும்பு பாலம் ஒன்று உடைந்து ஒரு பகுதி ஆற்றில் மூழ்கியது. அப்போது அந்த பாலத்தில் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்று ஆற்றில் விழுந்து வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இந்த பேருந்தில் பயணித்த 20 பேரும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதற்கிடையே, வியட்நாமில் புயல் பாதிப்புக்கு பலியானோர் எண்ணிக்கை தற்போது 64ஆக உயர்ந்ததாக அந்த நாட்டின் பேரிடர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.






லண்டன்

# "நிம்மதியாக இருக்கிறேன்"

தனது கீமோதெரபி சிகிச்சையை வெற்றிகரமாக முடித்து விட்டதாக பிரிட்டனின் வேல்ஸ் இளவரசி கேட் மிடில்டன் சந்தோஷமாக தெரிவித்தார்.

பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸ் மகன் வில்லியமின் மனைவி கேட் மிடில்டன், புற்றுநோய் பாதிப்புக்கு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், அவர் தனது கீமோதெரபி சிகிச்சையை முடித்து விட்டதாகவும், இந்த ஆண்டு முழுவதும் பொது பணிகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்து காணொளியொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "கடந்த 9 மாதங்கள் ஒரு குடும்பமாக எங்களுக்கு நம்பமுடியாத அளவிற்கு கடினமாக இருந்தது. கோடைக்காலம் முடிவடையும் நிலையில், இறுதியாக எனது கீமோதெரபி சிகிச்சையை முடித்ததில் நிம்மதி கிடைத்து விட்டது.

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் கிடைத்த ஆதரவிற்கு நன்றி. புற்றுநோய் பயணம் சிக்கலானது, பயமுறுத்தும் மற்றும் கணிக்க முடியாதது. நான் மீண்டும் வேலைக்கு வருவதை எதிர்பார்த்து காத்திருக்கிறேன், மேலும் வரும் மாதங்களில் என்னால் முடிந்தால் இன்னும் சில பொது பணிகளை மேற்கொள்வதற்காக காத்திருக்கிறேன். இந்த நேரத்தில் எங்களுக்கு உதவி செய்யும் அனைவரிடமிருந்தும் பெரும் பலத்தைப் பெற்றுள்ளோம்" என்றார்.

ராதாபுரம்

## முன்விரோதத்தால்
# 3 வயது சிறுவனை கொன்ற பெண்



ராதாபுரம் அருகே ஆத்துகுறிச்சியில் 3 வயது சிறுவனைக் கொன்று, உடலை வொஷிங் மெஷினில் மறைத்து வைத்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகே உள்ள ஆத்துகுறிச்சி பகுதியை சேர்ந்தவர் விக்னேஷ். இவரின் 2ஆவது மகனான, மூன்று வயதான சஞ்சய், கடந்த 9ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் ராதாபுரம் பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கப்பட்ட நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், எதிர்வீட்டு பெண்மணி தங்கத்திற்கும், விக்னேஷ் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்ததை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து அந்தப்பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டதில், அவர் சிறுவனை கழுத்தை நெரித்து கொலை செய்து, சாக்கு மூட்டையில் கட்டி தனது வீட்டிலுள்ள துணி துவைக்கும் இயந்திரத்திற்குள் மறைத்து வைத்தது தெரியவந்தது.

இந்நிலையில், சிறுவனின் உடலை கைப்பற்றிய பொலிஸார், உடற்கூறு பரிசோதனைக்காக ராதாபுரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து கொலை சம்பவத்தில் ஈடுபட்ட தங்கத்தை கைது செய்து, வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், 40 வயதான தங்கம், கடந்த சில மாதங்களுக்கு முன்பு தனது மகனை இழந்துள்ளார். விபத்து ஒன்றில் சிக்கி அவரது மகன் உயிரிழந்ததாக தெரிகிறது. இதனால் அவர் மனமுடைந்த நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே எதிர்வீட்டு விக்னேஷ் குடும்பத்திற்கும், தங்கம் குடும்பத்திற்கும் தகராறு இருந்து வந்த நிலையில், அவர்கள் குழந்தையுடன் மகிழ்ச்சியாக இருப்பதை சகித்து கொள்ள முடியாத அவர், சாலையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று கொலை செய்தது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


மணிப்பூர்

## தீப்பந்தங்களுடன் வீதியில்
# போராடும் பெண்கள்

மணிப்பூரில் அமைதி திரும்ப மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி பெண்கள் தீப்பந்தம் ஏந்தி பேரணியாக சென்றனர்.

மணிப்பூரில் மெய்தி மற்றும் குக்கி இன மக்களிடையே வெடித்த மோதல், 16 மாதங்களைக் கடந்தும் இன்னும் ஓயாமல் உள்ளது. இருதரப்பு மோதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில், பெரும் பொருட்சேதம் ஏற்பட்டதுடன், இலட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், ரொக்கெட் லோஞ்சர்கள் மற்றும் டிரோன்களை கொண்டு தாக்குதல்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இதனால் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதோடு, பொதுமக்களிடையே அச்சமும் அதிகரித்துள்ளது.




இந்நிலையில், மணிப்பூரில் நிலவும் மோதலைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும், அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையிலும், அம்மாநில பெண்கள் தீப்பந்தம் ஏந்தி பேரணி சென்றனர்.

நூற்றுக்கணக்கான பெண்கள் சேர்ந்து THAU மைதானத்தில் கூடி சுமார் 10 கி.மீ. தூரம் அணிவகுத்துச் சென்றனர். அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்கில் ராஜ் பவன் மற்றும் முதலமைச்சர் இல்லம் போன்ற முக்கியமான பகுதிகளைத் தவிர்த்ததுடன், மணிப்பூரின் பல்வேறு பகுதிகளிலும், பெண்கள் தீப்பந்தம் ஏந்தி பேரணியில் ஈடுபட்டனர்.

மணிப்பூரின் ஒற்றுமைக்கு அழைப்பு விடுத்தும், அமைதியை மீட்டெடுக்க மத்திய அரசை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.



## தேசங்களுக்கான லீக்:
# பெல்ஜியத்தை வென்ற பிரான்ஸ்

தேசங்களுக்கான லீக் தொடரில், தமது நாட்டில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற பெல்ஜியத்துடனான குழு பி போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றது.

பிரான்ஸ் சார்பாக, ரன்டல் கொலோ முவானி, உஸ்மனே டெம்பிலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இத்தாலியிடம் தோல்வியடைந்த பிரான்ஸ் அணியிலிருந்து அணித்தலைவர் கிலியான் மப்பே உள்ளிட்ட எட்டு மாற்றங்களை பிரான்ஸின் பயிற்சியாளர் டிடியன் டிஷம்ப்ஸ் மேற்கொண்ட நிலையில், இரண்டாம் பாதியிலேயே மப்பே களமிறங்கியிருந்தார்.

## கற்பிட்டி யுனைட்டெட் கழகத் தொடர்:
# சம்பியனான பனாக்கோ



அஸ்ஹர் இப்றாஹிம்

கற்பிட்டி யுனைட்டெட் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த கால்பந்தாட்டத் தொடரில் பனாக்கோ அணி சம்பியனானது.

அல் மனார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 21 அணிகள் பங்கேற்ற அணிக்கு ஏழு பேர் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் யுனைட்டெட்டை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே பனாக்கோ சம்பியனானது.

இத்தொடரின் நாயகனாகவும், இறுதிப் போட்டியின் நாயகனாகவும் பனாக்கோவின் முஹம்மட் அஹதிர் தெரிவானார்.

# முகாமையாளரானார் பொச்செட்டினோ



ஐக்கிய அமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர்களை சந்தித்தமையையடுத்து அந்நாட்டின் புதிய முகாமையாளராக இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான செல்சி மற்றும் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்னாள் முகாமையாளர் உறுதிப்படுத்தப்படவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. செல்சி, டொட்டென்ஹாம் தவிர பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனையும் பொச்செட்டினோ வழிநடத்தியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு
# கிரிக்கெட் தொடர்

புறக்கோட்டை சமூக பொலிஸ் பிரிவும், புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு சுயதொழிலாளர்கள் சங்கமும் இணைந்து மூன்றாவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள எல்.டபிள்யூ. பெரேரா ஞாபகார்த்த மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரானது திங்கட்கிழமை(16) நடைபெறவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை சந்திரா சில்வா மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் பகல், இரவு போட்டிகளாக நடைபெறவுள்ளன. அணிக்கு எட்டுப் பேர் கொண்ட இத்தொடரானது 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.

இம்முறை மொத்தமாக 12 அணிகள் நான்கு குழுக்களின் கீழ் போட்டியிடுகின்றதுடன் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் விலகல் முறையில் அனைத்துப் போட்டிகளும் நடைபெறும்.

சம்பியன் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு எல்.டபிள்யூ. பெரேரா ஞாபகார்த்தக் கிண்ணமும், இரண்டாமிடத்தைப் பெறும் அணிக்கு கிண்ணமும் வழங்கப்படவுள்ளதுடன், ஏனைய சிறப்பு பரிசுகள் பலவும் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.





## கிழக்கு மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி:
# ஒலுவில் அல்–ஹம்றாவுக்கு இரண்டு முதலிடங்கள்

றியாஸ் ஆதம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலய மாணவிகளான ஆர்.எப்.சமா, எச்.எப்.லுபினா ஆகியோர் முதலாமிடங்களைப் பெற்று தங்களது பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் சனிக்கிழமை (07) நடைபெற்ற இப்போட்டிகளில், 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் சமா 25.78 மீற்றர் தூரம் வீசி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதலில் லுபினா 9.54 மீற்றர் தூரம் எறிந்து முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

குறித்த இரு மாணவிகளும் தேசிய மட்ட விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 11, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.